# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 14,923/4 — 1970 සැප්තැම්බර් 16 වැනි බදාදා — 1970.9.16**

14,923/4 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காக தனித் தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]

### பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

எனது இல. 21/70

### இலங்கை நிருவாக சேவையின் V ஆம் வகுப்பிற்கும் இலங்கை கடல் கடந்த சேவைக்கும் அனுமதிப்பதற்குப் போட்டிப் பரீட்சை—1970

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பிற்கும் இலங்கை கடல் கடந்த சேவைக்கும் அனுமதிப்பதற்குக் கொழும்பில் 1970 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைக்குரிய பின்வரும் ஒழுங்குவிதிகள், பரீட்சைத் திட்டம், பாடப் பொழிப்பு போது அறிவுப்புக்காக வெளியிடப்படுகின்றன. 1970 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆம் திகதியிட்ட 14,915 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 1970 ஆம் ஆண்டு யூலை மாதம் 4 ஆம் திகதியிட்ட எனது அறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளும், பரீட்சைத் திட்டமும் பாடப்பொழிப்பும் இத்தால் நிராகரிக்கப்படுகின்றது.

எ. பி. நாணயக்காரா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
அ. பெ. இல. 500, கொழும்பு,
1970 ஆம் ஆண்டு செத்தெம்பர் மீ 11 ந உ.

#### ஒழுங்குவிதிகள்

1. இலங்கை நிருவாக சேவையின் V ஆம் வகுப்பிற்கும் இலங்கை கடல் கடந்த சேவைக்கும் அனுமதிப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் யாவர்க்குமுரிய ஒரு போட்டிப் பரீட்சை நடாத்தப்படும். பரீட்சை இரு பாகங்களாக நடத்தப்படும். பிரிவு அ—கழித்தகற்றற் சோதனை—இது கட்டுரைகளிலும் கிரகித்தலிலும் வினாத்தாள்களைக் கொண்டிருப்பதுடன், முதலில் 1970 திசம்பரில் அல்லது அதற்கு அண்மையில் நடத்தப்படும். உண்மையான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும். பிரிவு ஆ—தெரிவுச் சோதனையும் (இலங்கை கடல் கடந்த சேவைப் பரீட்சார்த்திகளுக்கான பிரிவு (இ) சோதனையும்) பிரிவு (அ) வின் பெறுபேறுகள் கிடைக்கப்பெற்ற பின்பு நடத்தப்படும். பிரிவுகள் (ஆ) வுக்கும் (இ) க்குமான திகதிகள் பின்பு அறிவிக்கப்படும். பொதுநலங்கருதி இப்பரீட்சையை நிராகரித்தல் அவசியமென அரசாங்க சேவை ஆணைக்குழு கருதினால் அவ்வாறு செய்யும் உரிமையை ஆணைக்குழு தன்மாட்டுக் கொண்டுள்ளது. இப்பரீட்சையைத் தள்ளிப்போடல் அவசியமென அரசாங்க சேவை ஆணைக்குழு கருதினால் ஆணைக்குழு அவ்வாறு செய்யலாம்.

2. இப்பரீட்சை முடிவில் இலங்கை நிருவாகச் சேவையிலும் இலங்கை கடல் கடந்த சேவையிலும் நிரப்பப்படவுள்ள வெற்றுப் பதவிகளின் எண்ணிக்கையையும் அத்தகைய வெற்றுப் பதவிகளை நிரப்பும் திகதியும் உரியகாலத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நிர்மாணிக்கப்படும். அவ்வெற்றுப் பதவிகள் யாவற்றையுமோ அல்லது சிலவற்றையுமோ பொதுநல நோக்கில் நிரப்பாது விடுவது அவசியமென அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கருதப்படுமிடத்து அது அவ்வண்ணம் நிரப்பாதுவிடும் உரிமையைத் தன்மாட்டுக் கொண்டுள்ளது.

3. இப்பரீட்சைக்குரிய பரீட்சார்த்திகள் இலங்கையராகவிருத்தல் வேண்டும். இப்பரீட்சையின் பொருட்டு இலங்கையர் என்பவர் பரம்பரை வழியாகவோ அல்லது பதிவு வழியாகவோ இலங்கைக் குடியாகவிருத்தல் வேண்டும்.

4. இப்பரீட்சைக்குரிய பரீட்சார்த்திகள் 1970 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 1 ஆந் திகதி 22 வயதடைந்தவராகவும் 30 வயதடையாதவராகவும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையிலும் அரசாங்க யாக்கங்களிலும் உள்ளூராட்சிச் சேவையிலும் நிரந்தர நியமனம் வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு மேற்கூறிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

5. விதிக்கப்பட்ட தகைமைகளையுடைய பெண் பரீட்சார்த்திகள் இப்பரீட்சையில் போட்டியிடும் உரிமையுடையவராவர். ஆனால் அவர்கள் நிரப்பப்படவுள்ள பதவிகளுள் 20 நூற்றுவீதத்திற்கு மேற்படாத பதவிகளை மட்டும் நிரப்பலாம் என்னும் நிபந்தனைக்குக் கட்டுப்பட்டவராவர்.

6. பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிடமிருந்து எழுத்துமூலம் நியமனம் பெறவேண்டுமென வேண்டப்படுகின்றனர். விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்பு மட்டுமே நியமனம் வழங்குதல் பற்றிக் கருத்திற் கொள்ளப்படும்.

7. பரீட்சார்த்திகள் உடனலமும் பண்பும் சம்பந்தமாகத் தாம் தகுதியுடையவரென அரசாங்க சேவை ஆணைக்குழுவைத் திருத்திப்படுத்தல் வேண்டும். அவர்கள் திடமான உடலமைப்பு உடையவராகவும் நல்ல கண்பார்வை உடையவராகவும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை செய்வதற்கு உடல்நலத் தகுதி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். இந்த விடயங்கள் சம்பந்தமாகச் சித்தியடையும் பரீட்சார்த்திகளைச் சோதிப்பதன் பொருட்டு அவர்கள் ஒரு கடுமையான மருத்துவப் பரீட்சைக்கு ஆளாதல் வேண்டும்.

8. திருமணம் முடித்த பரீட்சார்த்தியொருவர் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விசேட சம்மதமின்றி நியமிப்புக்கு உரிமையுடையவராகார்.

9. இப்பரீட்சைக்குரிய கட்டணம் பின்வருமாறு :—

(அ) பரீட்சைக்குரிய கட்டணம் 200 ரூபா. இக்கட்டணம் விண்ணப்பம் முடிவுறும் திகதிக்கு முன்னராக மிக அண்மையிலுள்ள கச்சேரியிலோ, கொழும்பு பொதுத் திறைசேரியிலோ செலுத்தப்பட்டு அரசிறைத் தலைப்பு VI உபதலைப்பு 3, இனம் (4) என்பதில் வரவு வைக்கப்படல் வேண்டும். கச்சேரியினது அல்லது திறைசேரியினது பற்றுச்சீட்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும். அரைவாசி பிரவேசக் கட்டணம் அதாவது 100 ரூபாவானது 200 ரூபா கட்டி பிரிவு (ஆ) வுக்கு (இலங்கை கடல் கடந்த சேவைப் பரீட்சார்த்திகளின் விடயத்தில் பிரிவு (இ) வுக்கும்) தோற்றுவதற்கு அழைக்கப்படாதவர்களுக்கு திரும்பக் கொடுக்கப்படும்.

குறிப்பு : இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நியமனம் பெறாத பரீட்சார்த்திகளுக்கு முழுக் கட்டணமும் திருப்பிக் கொடுக்கப்படும். நியமனம் அளிக்கப்பட்ட பின்னர் பரீட்சார்த்தியொருவர் எக்காரணம் பற்றியும் பரீட்சையிலிருந்து விலகினால் அல்லது பரீட்சை எடுப்பதற்குத் தோற்றுவிடில் இக்கட்டணம் முழுவதையும் அல்லது பகுதியையேனும் திருப்பிப் பெறும் உரிமையுடையவராகார்.

(ஆ) மருத்துவப் பரீட்சைக்குரிய கட்டணம் ரூபா 10.50 சதம். இக்கட்டணம் செலுத்தவேண்டிய முறை சித்தியடையும் பரீட்சார்த்திகளுக்குப் பின்னர் அறிவிக்கப்படும்.

10. (அ) குறித்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய நியமனமானது அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் சிறப்பு அல்லது சாதாரண பட்டதாரிப் பரீட்சையில் அல்லது இதனையொத்த தரமெனக் கருதப்படும் வேறு யாதாயினும் ஒரு பரீட்சையில் சித்தியடைந்துள்ள பரீட்சார்த்திகளுக்கு மட்டும் கட்டுப்படுத்தப்பட்டதாகும்.

(ஆ) வாய்மொழிப் பரீட்சையின்போது தமது பட்டச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்குமாறு பரீட்சார்த்திகள் வேண்டப்படுவர்.

(இ) இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பிற்கும் இலங்கை கடல் கடந்த சேவைக்கும் அனுமதிக்கப்படுவதற்குரிய போட்டியில், தகைமை பெற்ற பரீட்சார்த்திகள் மட்டும் சேரலாம். இலங்கை நிருவாகச் சேவை, இலங்கை கடல் கடந்த சேவை ஆகியவற்றிற்கிடையில் தங்களது விருப்புரிமையை பரீட்சார்த்திகள் கூடு 18 இல் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய இறுதித் திகதிக்குப் பின் குறிப்பிட்ட விருப்புரிமையில் மாற்றஞ் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

11. **விண்ணப்பிக்கும் முறையின் மீதான பணிப்புரைகள்.**—(i) 100 ரூபாக் கட்டணத்தைக்கட்டி 1970 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 1970.5.8 ஆந் திகதியிடப்பட்ட அறிவுப்புக்கிணங்க ஏற்கெனவே விண்ணப்பித்து, 1970.7.17 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட, திருத்தப்பட்ட ஒழுங்குவிதிகளின் 11 ஆம் பந்தியின் (II) ஆம் குறிப்பின்படி தங்களுடைய விண்ணப்பங்களை மீளப் பெற்றவர்கள் கீழே காணப்படும் திருத்தப்பட்ட திட்டத்தின் மீது பரீட்சைக்குத் தோற்ற விரும்பினால் அவர்கள் திரும்பவும் விண்ணப்பம் செய்வதற்கு அனுமதிக்கப்படுவோர்கள். இந்தப் பரீட்சார்த்திகள் திரும்பவும் விண்ணப்பிப்பதன் பொருட்டு மேற்பட்டவொரு தொகையாக 100 ரூபாவைக் கட்டுதல் வேண்டும். இந்தப் பரீட்சார்த்திகளுக்குத் தேவையான அறிவுறுத்துரைகளுடன் இந்த அலுவலகத்தினால் விண்ணப்ப படிவங்கள் வழங்கப்படும். இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்கள் கட்டுப்பணமாகிய 100 ரூபாவுக்கான காசுப் பற்றுச்சீட்டுடன் பூர்த்திசெய்யப் பட்ட விண்ணப்பப் படிவங்களை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரிடம் 1970 ஒற்றோபர் 10 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னராகச் சேரும் வண்ணம் பதிவு அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். இத்திகதிக்குப்பின் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

கீழே காணப்படும் திருத்தப்பட்ட திட்டத்தின் மீது பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விரும்பாதவர்கள் தங்களுடைய பரீட்சைக் கட்டணமாகிய 100 ரூபாவைத் திருப்பிக் கொடுக்குமாறு அரசாங்கச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு எழுத்துமூல வேண்டுகோள் விடுக்குமிடத்து, அவர்களுக்கு அப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். இந்த வேண்டுகோள்கள் 1970 ஒற்றோபர் 10 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் பெற்றுக்கொள்ளப்படும் வேண்டுகோள்கள் நிராகரிக்கப்படும். 70.7.17 ஆந் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவிற்பிற்கிணங்க மீளளிப்புகள் பெறுவதற்குச் செய்யப்பட்ட வேண்டுகோள்கள் நிராகரிக்கப்பட்டனவாகக் கருதப்படுவதுடன் பரீட்சார்த்திகள் மீளளிப்புகளுக்காகத் திரும்பவும் விண்ணப்பித்தாலேயொழிய மீளளிப்புகள் செய்யப்படமாட்டா.

(ii) (அ) 70.5.29 ஆந் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கிணங்க 100 ரூபாக் கட்டணத்தைக் கட்டுப்பணமாகச் செலுத்தியதன் மூலமும் 70.7.17 ஆந் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் 11 ஆம் பந்தியின் (I) ஆம் குறிப்பின் நியதிகளின்படி மேற்பட்டவொரு கட்டணமாக 100 ரூபாவைக் கட்டியதன் மூலமும் ;

(ஆ) 70.7.17 ஆந் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கிணங்க 200 ரூபாக் கட்டணத்தைக் கட்டுப்பணமாகக் கட்டியதன் மூலமும்,

விண்ணப்பித்துள்ளவர்களுக்கு அவர்கள் கீழேயுள்ள திருத்தப்பட்ட திட்டத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற விரும்பினால், பூர்த்திசெய்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரிடம் 1970 ஒற்றோபர் 10 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னராக வந்தடையுமாறு அனுப்பும் பொருட்டு விண்ணப்பப் படிவங்கள் இந்த அலுவலகத்தினால் வழங்கப்படும்.

(அ) இலும் (ஆ) இலும் குறிப்பிடப்பட்ட பரீட்சார்த்திகள் ஏற்கெனவே 200 ரூபாவைக் கட்டுப்பணமாகச் செலுத்தியுள்ளதனால் எந்தக்கட்டணத்தையும் கட்டுப்பணமாகச் செலுத்த வேண்டியதில்லை. கீழேயுள்ள திருத்தப்பட்ட திட்டத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற விரும்பாதவர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு எழுத்துமூல வேண்டுகோளை செய்வதன் மீது அவர்களுக்கு 200 ரூபாக் கட்டணம் மீளளிப்புச் செய்யப்படும். இந்த வேண்டுகோள்கள் 1970 ஒற்றோபர் 10 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் வேண்டுகோள்கள் கவனிக்கப்படமாட்டா.

குறிப்பு (1) : மேலே 11 ஆம் பந்தியின் (i), (ii) (அ), (ஆ) இல் குறிப்பிடப்பட்ட பரீட்சார்த்திகள் விண்ணப்பப் படிவங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டியதில்லை. இந்தப் பரீட்சார்த்திகளுக்கு ஏற்கெனவே இந்த அலுவலகத்திற்கு அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களில் கொடுக்கப்பட்டுள்ள முகவரிகளுக்கு இந்த அலுவலகத்தினால் விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்படும்.

குறிப்பு (2) : மேலே, 11 ஆம் பந்தியின் (i), (ii) (அ), (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் இந்த அறிவிப்பில் விதிக்கப்பட்டுள்ள எல்லாத் தகைமைகளையும் பெற்றிருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

இவ்வறிவித்தலின் பிரகாரம் தகைமை பெறாத அல்லது தேவையான கட்டணத்தைக்கட்டியிராத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(iii) ஒன்றில் 70.5.29 ஆந் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் அறிவிப்புக்கு இணங்கவோ அல்லது 70.7.17 ஆந் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் அறிவிப்புக்கு இணங்கவோ விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காதவர்கள் இங்கு விதிக்கப்பட்ட தகைமைகளையுடையவர்களாகவிருக்குமிடத்து, அவர்கள் அவ்வாறு விரும்பினால் இப்பரீட்சைக்கு இந்த அறிவிப்பின் கீழ் விண்ணப்பிக்கலாம். அவர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரிடமிருந்து 1970.9.20 ஆந் தேதியிலிருந்து 1970.10.6 ஆந் தேதி வரைக்கும் அச்சிடப்பெற்ற விண்ணப்பப்படிவங்களைப் பெறலாம். அச்சிடப்பெற்ற விண்ணப்பங்களுக்கான வேண்டுகோள்களுடன் அளவில் 9" × 4" க்குக் குறையாத முகவரியிடப்பட்ட முத்திரையிடப்படாத ஒரு உறையும் அனுப்பப்படல் வேண்டும். நேராக வந்து கேட்போருக்கு விண்ணப்பங்கள் கொடுக்கப்படமாட்டா. விண்ணப்பங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளர், அ. பெ. இல. 500, கொழும்பு 1 என்னும் முகவரியிடப்பட்டுப் பதிவு அஞ்சல் மூலம் அன்னாரை 1970, ஒற்றோபர் மாதம் 10 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரசாங்க சேவையிலுள்ளவர்களின் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களினூடாக 109 ஆம் நிருவாகப் பிரமாணங்களுக்கிணங்க அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க யாக்கங்களிலும் உள்ளூராட்சிச் சேவையிலும் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் அவரவர்களின் நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும்.

(iv) விண்ணப்பங்கள் எல்லாவகையிலும் பூரணமானதாக இருத்தல் வேண்டும். கேட்கப்படும் தகவல்கள் யாவற்றையும் கொண்டிராத எந்த விண்ணப்பமும் அதில் கொண்டுள்ள தகைமைகளைக் கொண்டு மட்டும் தீர்மானிக்கப்பட்டு நிராகரிக்கப்படுவதற்கு ஏதுவாகும்.

(v) அத்தகைய விண்ணப்பம் அல்லது அது சம்பந்தமான கடிதம் எதுவும் அஞ்சலில் இழக்கப்பட்டுள்ளது அல்லது தாமதிக்கப்பட்டுள்ளது என்னுங் குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களைத் தாமதிக்கும் பரீட்சார்த்திகள் தமது சொந்த ஆபத்தின் பேரில் அவ்வாறு செய்வர்.

(vi) விண்ணப்பப்படிவங்களுடன் வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறிப்பிட்டுள்ள) அதில் குறிப்பிட்டுள்ளவாறு நிரப்பித் திருப்பியனுப்புமாறு பரீட்சார்த்திகள் வேண்டப்படுகின்றனர் ; அப்பொழுது இவ்வலுவலகத்தில் அவர்களுடைய விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்பட்டமை ஒப்புக்கொள்ளப்படும். இத்தேவைக் கிணங்கி ஒழுகாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் ஒப்புக்கொள்ளப்படமாட்டா. இத்தேவைக் கிணங்கி ஒழுகியும் முடிவுத் தேதிக்கு பின்னர் மூன்று கிழமைக்குள் ஒப்புக்கொள்ளலைப் பெறுத பரீட்சார்த்திகள் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உடனேயே அறிவித்தல் வேண்டும். இவ்வேற்பாட்டிற்கிணங்க ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரரின் கோரிக்கை எதுவும் ஆராயப் படாது விடப்படலாம்.

12. எந்தப் பரீட்சார்த்தியும் இரு தடவைக்கு மேலாக யாவர்க்குமுரிய போட்டிப் பரீட்சையெடுக்க உரிமையுடையவராகார்.

13. இப் பரீட்சை எழுதுவதற்கு நியமனங்கள் அளிக்கப்பட்டுள்ள எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை ஆணையாளர் அனுமதி அட்டையை வழங்குவார்.

14. அடையாள அட்டைகள்—பரீட்சார்த்திகள் தாம் எடுக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும், உரிய மேற்பார்வையாளர் திருத்திப்படும் வகையில் தமது அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இதன் பொருட்டுப் பின்வரும் சாதனங்கள் யாதேனும் ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) அஞ்சல் தலைமை அதிபதியினுல் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள்.

(ஆ) இப் பரீட்சைத் தேதிக்கு மூன்று ஆண்டுக்காலத்துக்கு மேற்படாது வழங்கப்பட்டுள்ள செல்லுபடியான கடவுச்சீட்டு.

(இ) அரசாங்கத் திணைக்களத்தின் அரசாங்க யாக்கத்தின் அல்லது பிறிதோர் நியதிச் சட்டமுறையான நிறுவனத்தின் அதிகாரத்தின பேரில், இப் பரீட்சைத் தேதிக்கு மூன்று ஆண்டுக்கு மேற்படாது வழங்கப்பட்டுள்ளதும் அதனை வைத்திருப்பவரின் நிழற்படத்தையும் கொண்டுள்ளதுமான ஏதாவது சான்றிதழ், உத்தரவுச் சீட்டு அல்லது பிறிதொரு சாதனம்.

15. பொய்யான தகவல்களைக் கொடுப்பவர்க்குத் தண்டம்—இப்பரீட்சை ஒழுங்குவிதிகளின்படி ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் எனக் கண்டு பிடிக்கப்பட்டால், இப்பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் பொழுதோ அல்லது அதற்குப் பின்னரோ எக்கட்டத்திலும் அவரின் பரீட்சையுரிமை நிராகரிக்கப்படுவதற்கு ஏதுவாகும். ஒரு பரீட்சார்த்தி அளிக்கும் விவரங்கள் எவையும் அவரின் அறிவுக்கு எட்டிய அளவில் பொய்யானவையெனக் காணப்படின் அல்லது அவர் எவ்வுண்மையையும் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அரசாங்க சேவையிலிருந்து அவர் விலக்கப்படுவதற்கு ஆளாவர்.

16. அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பகுதி I பிரிவு (II) இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

**இலங்கை நிருவாக சேவையின் V ஆம் வகுப்பிற்கும் இலங்கைக் கடல் கடந்த சேவைக்கும் அனுமதிப்பதற்கு யாவர்க்குமுரிய போட்டிப் பரீட்சை**

பரீட்சைத் திட்டம்

**மொழி மூலம் :** போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(i) பரீட்சார்த்திகள் தகைமைப் பரீட்சையில் எம்மொழியில் எழுதிச் சித்தியடைந்தார்களோ அம்மொழியிலேயே அல்லது சிங்களமாகிய அரசகரும மொழியிலேயே இப்பரீட்சையை எழுதுதல் வேண்டும்.

(ii) தகைமைப் பரீட்சையில் வெவ்வேறு பாடங்களை ஒன்றிற்கு மேற்பட்ட மொழியில் சித்திபெற்ற பரீட்சார்த்திகள் தகைமைப் பரீட்சையில் பெரும்பான்மையான பாடங்களை எந்த மொழியிலே சித்தியடைந்தார்களோ அம்மொழியிலேயே அல்லது சிங்கள மாகிய அரசகருமமொழியிலேயே இப்பரீட்சையை எழுதுதல் வேண்டும்.

(iii) பிரதான பாடத்தை ஒரு மொழியிலும் துணைப்பாடத்தை இன்னெரு மொழியிலும் சித்தியடைந்த சிறப்புப் பட்டங்களையுடைய பரீட்சார்த்திகள் பிரதான பாடத்தை எம்மொழியிலே சித்தியடைந்தார்களோ அம்மொழியிலேயே அல்லது சிங்களமாகிய அரசகரும மொழியிலேயே இப்பரீட்சையை எழுதவேண்டும்.

**குறிப்பு (1)** மேலேயுள்ள (i), (ii) இல் உள்ள "தகைமைப் பரீட்சை" என்ற பதம் ஒழுங்கு விதிகளிலுள்ள 10(அ) ஆம் பந்தியில் குறிப்பிடப் பட்ட பரீட்சையைக் குறிக்கும்.

**குறிப்பு (2)** பரீட்சார்த்திகள் பரீட்சையின் எல்லா வினுப்பத்திரங்களுக்கும் ஒரு மொழியில் மட்டும் எழுதவேண்டும்.

**குறிப்பு (3)** விண்ணப்பங்களின் முடிவுத் தேதிக்குப் பின்னர் மொழி மூலத்தை மாற்றப் பரீட்சார்த்திகள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**பாடங்கள் :** பரீட்சையில் பின்வரும் பாடங்கள் அடங்கும் :—

**பிரிவு அ—கழித்து அகற்றல் சோதனை—எல்லாப் பரீட்சார்த்திகளும் கட்டாயமாக எடுத்தல் வேண்டும்**

1. கட்டுரைகள் — ஒரு வினுப்பத்திரம்
2. கிரகித்தல் — ஒரு வினுப்பத்திரம்

பரீட்சார்த்திகள் பிரிவு ஆ—தெரிவுச்சோதனைக்குத் (இலங்கைக் கடல் கடந்த சேவைக்குரிய பரீட்சார்த்திகளுக்கு இ பிரிவும்) தோற்றுவதற்குத் தகுதியடைவதற்கு மேலேயுள்ள பிரிவு அ இலுள்ள இரு வினுப் பத்திரங்களில் ஒவ்வொன்றிலும் 65% தரத்தையடையுமாறு எதிர்பார்க்கப்படுவார்கள்.

**பிரிவு ஆ—தெரிவுச் சோதனை**

| | | |
|---|---|---|
| பொது வினுப்பத்திரம் | — | 150 புள்ளிகள் |
| நுண்ணறிவுச் சோதனை | — | 150 புள்ளிகள் |
| வாய்மொழிச் சோதனைகள் (பொது) | — | 200 புள்ளிகள் |

**பிரிவு இ—இலங்கைக் கடல்கடந்த சேவைக்குரிய பரீட்சார்த்திகட்குக் கட்டாயமானது**

| | | |
|---|---|---|
| உலக அலுவல்கள் | — | 100 புள்ளிகள் |
| வாய்மொழிச்சோதனை (சிறப்பு) | — | 150 புள்ளிகள் |

**பரீட்சை முறை :** பரீட்சை இரு பாகங்களாக நடாத்தப்படும். பிரிவு அ—கட்டுரைகளில் ஒரு வினுப்பத்திரமும் கிரகித்தலில் ஒரு வினுப்பத்திரமும் கொண்ட பரீட்சை உடைய கழித்தகற்றற் சோதனை முதலில் நடாத்தப்படும். பிரிவு அ இல் இரு வினுப்பத்திரங்களில் ஒவ்வொன்றிலும் 65% தரத்தையடைபவர்கள் பிரிவு ஆ—தெரிவுச் சோதனைக்குத் (இலங்கைக்கடல் கடந்த சேவைக்குரிய பரீட்சார்த்திகளுக்கு இ பிரிவும்) தோற்றத் தகுதியுடையவராவர்.

பிரிவு ஆ—தெரிவுச் சோதனை—பொது வினுப்பத்திரம் ஒன்றையும், நுண்ணறிவுச் சோதனை ஒன்றையும், இரு வாய்மொழிச் சோதனைகளையும் (பொது) கொண்டுள்ளது. இலங்கைக் கடல் கடந்த சேவைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் இரு வாய்மொழிச் சோதனைகள் (பொது) உட்பட பிரிவு ஆ இலுள்ள பாடங்களுடன உலக அலுவல்கள் பற்றிய வினுப்பத்திரத்திற்கும் தோற்றும்படி வேண்டப்படுவர். அரசாங்க சேவை ஆணைக்குழுவினுல் தீர்மானிக்கப்படும் போதுமானளவு உயர்ந்த தரத்தை உலக அலுவல்கள் வினுப்பத்திரத்தில் அடையும் பரீட்சார்த்திகளே மட்டும் வாய்மொழிச் சோதனைக்கு (சிறப்பு) அழைக்கப்படுவார்கள்.

### இலங்கை நிருவாக சேவை நியமிப்புக்கான தெரிவு முறை

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பு நியமனத்திற்கான இறுதித் தேர்வானது, குறித்த பரீட்சையின் பிரிவு ஆ—தெரிவுச் சோதனையில்—ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளை எடுத்தவர்களுக்கிடையில் செய்யப்படும்.

### இலங்கைக் கடல் கடந்த சேவை நியமிப்புக்கான தெரிவு முறை

இலங்கைக் கடல்கடந்த சேவை நியமிப்புக்கான இறுதித் தேர்வு பிரிவு ஆ—தெரிவுச் சோதனையிலும் பிரிவு இ இலும் பெற்ற மொத்தப் புள்ளிகளில் ஆகக்கூடிய மொத்தத்தைப் பெற்றுக் கொள்பவர்களுக்கிடையிற் செய்யப்படும்.

### பாடப்பொழிப்பு

வேறு விதமாகக் குறிப்பிட்டிருந்தாலன்றி எல்லா வினாப்பத்திரங்களின் நேரம் மூன்று மணித்தியாலங்களாகும்.

**பிரிவு அ**—கற்றதகற்றும் சோதனை—எல்லாப் பரீட்சார்த்திகளும் கட்டாயமாக எடுத்தல் வேண்டும்.

கட்டுரைகள் :—பல விடயங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று விடயங்களில் மூன்று சுருக்கமான கட்டுரைகளை எழுதுமாறு பரீட்சார்த்திகள் வேண்டப்படும் வினாப்பத்திரமாகும். இவ்விடயங்கள் எதாவது சிறப்புக் கல்வித்துறையைச் சார்ந்திருக்கமாட்டா ; ஆனால் இவைகள் பரீட்சார்த்திகளின் பொது அறிவையும் நுண்ணறிவையும் சோதிப்பதற்கும் கற்பனைச்சக்தியையும் எடுத்துரைக்கும் பொது ஆற்றலையும் சோதிப்பதற்குமாக அமைந்திருக்கும். கட்டுரைகள் கருத்தின் ஆழத்திலும் அவ்விடயம் பற்றிய புதிய முறைகளைக் கையாளுந் திறனிலும் அவைகளை எழுதும் தன்மையிலும் சீர்தூக்கி ஆராயப்படும். அவைகள் விளக்கமாகவும் தெளிவாகவும் எழுதப்படுதல் வேண்டும்.

விளங்குதல் :—சுருக்கமான வாசகப்பகுதிகள் பரீட்சார்த்திக்கு வழங்கப்படும் 75 நிமிட நேர வினாப்பத்திரமாகும். சில பகுதிகளில், பகுதியின் பொருளடக்கத்துடன் நன்றாகப் பொருந்தும் மாற்றுக்கூற்றுக்களின் தொகுதி பரீட்சார்த்திக்கு வழங்கப்படும். அவர்கள் கூடப் பொருந்தக்கூடிய கூற்றைத் தெரிந்தெடுக்க வேண்டப்படுவார்கள். மற்றவாசகப் பகுதிகளில் அவைகளின் கருத்தைப் பரீட்சார்த்தி கிரகிக்கக்கூடிய முறையைச் சோதிப்பதற்கு வினாக்கள் அமைக்கப்படும்.

### பிரிவு ஆ—தெரிவுச் சோதனை

பொது வினாப்பத்திரம் :—பரீட்சார்த்தி வசிக்கப் பணிபுரிய வேண்டியதுமான சூழ்நிலைபற்றி அவரின் விழிப்புணர்ச்சியைச் சோதிக்க அமைக்கப்பட்ட பொது வினாப்பத்திரம். இச் சூழ்நிலை இலங்கையின் அரசியல், சமூக, பண்பாட்டு, பொருளாதாரச் சூழ்நிலை அனைத்துலகப் புவி அரசியல் சூழ்நிலை ; விஞ்ஞான தொழினுட்பச் சூழ்நிலையாகும். வினாக்களைத் தெரிந்தெடுக்க அனுமதியிருக்கும்.

நுண்ணறிவுச் சோதனை :—பரீட்சார்த்தியின் தர்க்கமுறையிற் சிந்திக்கும் ஆற்றலையும் அவருடைய மனதின் நுணுகி ஆராயும் தன்மையையும் தீர்மானிக்க அமைக்கப்பட்ட 60 நிமிட நுண்ணறிவுச் சோதனை. இவ் வினாப்பத்திரம் " பலதிறவிடைகளைத் தெரிந்தெடுக்கும் வினாக்கள் " என்ற வகை வினாக்களைக் கொண்டதாகும்.

வாய்மொழிச் சோதனைகள் (பொது):—வாய்மொழிப் பரீட்சைகள் இருவேறான சபைகளினால் ஒன்றன்பின் ஒன்றாக நடாத்தப்படும். ஒவ்வொரு சபையும் பரீட்சார்த்தி ஒருவருடன் சராசரி 15 தொடக்கம் 20 நிமிடங்களைச் செலவழிக்கும். ஒவ்வொரு சபையும் தனிப்பட்ட முறையில் பரீட்சார்த்திகளுக்கு மொத்தப்புள்ளி 100 க்கு ஏற்புடைத்தாகப் புள்ளிவழங்கும். இந்த இரு வாய்மொழிச் சோதனைகளின் நோக்கங்களில் ஒன்று பரீட்சார்த்திகளின் தலைமை ஆற்றலை மதிப்பிடுவதேயாகும்.

### பிரிவு இ—இலங்கைக் கடல் கடந்த சேவைக்குரிய பரீட்சார்த்திகட்குக் கட்டாயமானது

உலக அலுவல் :—இது தற்போதைய உலகம்பற்றிச் சிறப்பான குறிப்பிடலுடன் உலக அலுவல்களில் பரீட்சார்த்தியின் அறிவைச் சோதிக்க அமைக்கப்பட்ட இரு மணித்தியால நேர எழுத்து மூல வினாப்பத்திரமாகும்.

வாய்மொழிச் சோதனை (சிறப்பு) :—இது வாய்மொழிச் சோதனைக்கு (பொது) மேலதிகமானது. இது பரீட்சார்த்திகளின் தனிப்பட்ட தன்மைகளையும் வெளிநாடுகள், அனைத்துலக அலுவல்கள், அனைத்துலகச் சட்டம், பிறநாட்டு மொழிகள் போன்ற பிற காரணக் கூறுகளையும் கவனத்திற்கு எடுத்துக் கடல் கடந்த சேவைக்கு அவர்களின் தகுதியைக் கண்டறிவதற்கு அமைக்கப்பட்டதாகும்.

**குறிப்பு**—வாய்மொழிப் பரீட்சைகள் நடாத்தும் சபைகளுக்கு எழுத்துப் பரீட்சைகளில் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள புள்ளிகள் கொடுக்கப்படமாட்டா.

9-893

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.